Registered No. M. 878.

63

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 6 } 1915௵ ஜூலை௴ ராக்ஷஸ௵ ஆடி௴ { பகுதி 3.

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L., F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.

## CONTENTS.

பக்கம்.


1. தற்கால நிலைமை—அ. ரங்கசாமி ஐயர். B.A.,B.L.,F.T.S. 57
From the Editor- A. RangasamyI yer.B.A.,BL.,F.T.S.

2. குப்த வித்யை—B. S. ராமசுப்பையர் 67
Occultism—B. S. Ramasubbier.

3. பரமர் வரும் வழியிற் பிரயத்தனங்கள்—R. சேஷாசாரியர். 75
Preparation for the coming of the World Teacher—R. Seshacharyar.

4. ஓர் கடிதம்-தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி (மேல்மங்கலம்) 81
A Letter-Dakshinamurthi Sastri (Melmangalam)

5. சுதேச ஊழியர்களின் ஸங்கம் — B. S. இராமசுப்பையர் 85
Band of Servers to Motherland—B. S. Ramasubbier.

6. ஹிந்துக்களின் தத்வ சாஸ்திரம். — ஆர். எஸ். நாராயணசாமி ஐயர். 89
Philosophy of the Hindus—R. S. Narayanasamy Iyer

7. தியானக்கிரம விஷயம்—கே. எஸ். இராமசந்திர ஐயர். 96
Meditations—K. S. Ramachandra Iyer.

8. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தன். 101
Children's Corner—Vasanthananda.


---


# Ready for Sale.

*The English Translations of:—*

| | |
|---|---|
| **Thirty Minor upanishads** | **Rs. 3-8-0** |
| **Laghu Yoga Vasishta** | **Rs. 2-0-0** |
| **Professor Bergson & the Hindu Vedanta** | **Rs. 0-4-0** |

**without postage.**

The above Upanishads; except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq,**
Theosophical Society, Adyar Madras.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 | 1915 ௵ ஜுலை ௴ ராக்ஷஸ ௵ ஆடி ௴ | பகுதி 3.

## தற்கால நிலைமை.

---

நாளிது ஜுலை ௴ 19உயில் சென்னை ராஜதானியின் கவர்னராகிய லார்ட் பெண்ட்லாண்டு அவர்கள் சித்தூர் ஜில்லா மதனபள்ளி என்னும் ஊரில் மதனபள்ளி தியஸாபிகல் காலேஜ் என்ற பிரஹ்மக்ஞான வித்தியாசாலையைப் பகிரங்கப்படுத்தி அதுமதராஸ் யூநிவெர்ஸிடி என்றசென்னை சர்வகலாசாலையோடு,பரீக்ஷைகளின்பொருட்டு சேர்க்கப்பட்டிருக்கிறதென்று வெளியிட்டனர். அச்சமயத்தில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் அவ்வித்தியாசாலையின் நோக்கங்களை வற்புறுத்தினர். அவ்வித்யாசாலையானது முதல்முதல் 1888ய் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1911ம் வருஷத்தில் ஸ்ரீமான் எர்நஸ்டு உட் என்பவர் அதை மேல்பார்க்கச் சென்றார். அவ்வித்தியாசாலையின் மாணாக்கர்களுக்கு அவர்களது விவேகாபிவிர்த்திக்கு ஸாதகமான

கல்வியைக் கற்பிப்பதோடு அவர்களுக்கு நன்னடக்கையும் நற்குணமும் உண்டாகும் வண்ணம் அவைகளுக்கு ஆதாரமான மதவிஷயங்களும் போதிக்கப்பட்டு வருகின்றன. இந்து மாணுக்கர்களுக்கு ஸநாதன தர்மத்திலும், கிறிஸ்துவர்களுக்கு அவர்களின் மதத்திலும், மஹமதியர்களுக்கு அவர்களது சமபத்திலும் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வித்தியாசாலையில் கற்கும் வித்தியார்த்திகளின் விவேகம், சீலம் இவைகளின் அபிவிருத்திக்காக மேற்சொல்லியபிரகாரம்கல்விகற்றுக்கொடுக்கப்படுவதோடு, அவர்களதுசரீரப்பயிற்சியும்மிக கவனிக்கப்படுகிறதென்றும்தெரிகிறது. அவ்வித்தியாசாலையின் மாணுக்கர்கள் ஈசுவர பக்தியிலும், சிரத்தையிலும், ஒழுக்கத்திலும் உறுதியடைந்து சரீர பலத்துடனும் தெளிவான புத்தியுடனும் அவர்களது ஜன்மதேசத்திற்கு கைங்கர்யம் புரிவோர்களாயும், ராஜபக்தியுள்ள ராஜ்யமண்டல வாஸிகளாயும் வளர்வதே அவ்வித்தியாசாலையின் கருத்தென்று அம்மையாரவர்கள் சொன்னதை கனம்தங்கிய கவர்னரவர்களும் ஆமோதித்துக் கூறினர்.

***

மதனபள்ளி பிரஹ்மக்ஞான வித்தியாசாலை, பிரஹ்மக்ஞான வித்தியாபிவிர்த்தி சபையென்ற தியஸாபிகல் எடுகேஷனல் டிரஸ்டு சங்கத்தாரால் இந்தியாவில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட, காலேஜ் என்ற வித்தியாசாலையாகவிருக்கின்றது. இந்துமதத்தில், எல்லா சமயங்களும் ஈசுவரனை அடைவதற்குஏற்படுத்தப்பட்ட பல மார்க்கங்கள் என்பதுபண்டைக்காலமுதல்ஏற்புறுத்தப்பட்டதத்துவமாகும். அத்தத்துவம்இத்தேசத்தில்பெரும் பாலும்எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும், அதை ஒழுக்கத்தில் அனுசரித்து பல மதஸ்தர்களுக்குள் மத வித்தியாசங்களால் ஏற்ப

டும் துவேஷத்தை குறைத்தும், அன்பையும் அன்னியோன்ய பாவத்தையும் அதிகரித்தும், அத்தத்துவத்தின் அர்த்தத்தை உண்மையில் அறிவது துர்லபமாயிருக்கிறது. ஜாதி மத வருணவித்தியாசங்களுக்குப் புறம்பாகவிருக்கிற தத்துவமாகிய மனிதர்களது சகோதரபாவத்தை பிரஹ்மஞான சபையானது பிரதம்மான கொள்கையாகக் கைக்கொண்டு நிற்கின்றது. வைவஸ்வத மனுவினது ஆக்ஞையின் பேரில் ஆரியர்கள் இமயமலைக்கு வடபாரிசத்திலுள்ள பிரதேசங்களிலிருந்து இந்துதேசத்திற்குள் அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன்னர் வந்தபோது அவர்களது ஐக்கியமானது பலமாயிருந்ததென்றே நாம் ஊஹிக்கலாம்.

***

இத்தேசத்தின்கண் பரம்பரையாக ஸநாதன தர்மமானது தழைத்தோங்கி, பிரஹ்மாஜரிஷிகளின் ஆளுகையானது இப்பாரதவருஷம் முழுவதும் பரவி நின்றபோது மத, கொள்கை, ஆசாரம் முதலியவைகளில் இத்தேச ஜனங்களுக்குள் அக்காலங்களில் தற்கால வித்யாசங்கள் தோன்றாத காரணத்தால் ஐக்கிய பாவம் அதிகரித்திருந்ததென்றே நாம் சொல்லத்தகும். பௌத்த ஜைனர்களுக்கும் இந்துக்களுக்கும் பிற்காலங்களில் மத துவேஷம் ஏற்பட்டு, அதற்குப்பிறகு மகமதியர் இந்தியாவிற்கு வந்தபிறகு மத துவேஷம் அதிகரித்தது. கிறிஸ்துவர்கள் இத்தேசத்தில் உண்டானபிறகு மத வித்தியாசங்களுக்கு இன்னும் ஒரு காரணம் நூதனமாய்த் தோன்றிற்று. ஆதலால் முற்காலங்களைக்காட்டிலும் ஐக்கிய பாவமானது குன்ற நூதன வித்தியாசங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. முன் இத்தேசமானது இந்துக்களது தேசமென்று சொல்லத்தகும். இப்பொழுதோ உலகத்திலுள்ள எல்லா முக்கிய மதங்களைச் சார்ந்தவர்களும் இத்தேசத்தை ஜனன பூமியாகக்

கொண்டாடுகிறார்கள். இந்நிலைமையில் இவர்களுக்குள் ஸமரச ஞானத்தைப் புகட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது. அந்த ஸமரச உணர்வை இருவிதமாகக் கைக்கொள்ளலாம். எல்லா மதங்களையும் விலக்கி நாஸ்திக கொள்கைகளைக் கைப்பற்றி, கேவலம் புத்தியை தீக்ஷ்ணமாகச் செய்கின்ற கல்வியைமட்டும் கற்று எல்லா மதங்களையும் உதாஸீனத்தின் பேரில் உண்டாகும் ஸமபாவனையுடன் கவனியாது நின்றுவிடலாம்; அல்லது உலகத்தில் பரவிநிற்கும் முக்கிய மதங்களின் தத்துவார்த்தங்களை அறிந்து அவைகள் ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றனவென்று தெரிந்து, அவைகளை துவேஷமின்றி சமமாக பாவிக்கலாம். இரண்டாவதாகச் சொல்லப்படுகிற ஸம புத்திதான் பிரஹ்மக்ஞானசபையால் வற்புறுத்தப்படுகிறது. அது பிரஹ்மக்ஞான சபையோரால் ஸ்தாபிக்கப்படுகிற வித்தியாசாலைகளின் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்பட்டு அவர்களால் கவனிக்கப்படுகிறது. அதின் வாயிலாக, இப்போது பல வித்தியாசங்களோடு கூடிநிற்கின்ற இத்தேசத்து ஜனங்களுக்குள் ஐக்கிய பாவம் அதிகரிக்க இயலும்.

***

ஜீவன் நித்தியனென்றும், அவனுக்கு இவ்வுலகத்தில் பல ஜன்மங்கள் ஏற்படுகின்றனவென்றும் நமது தேசத்திலுள்ள எல்லா இந்துக்களும் அறிந்திருந்தாலும் அந்தத் தத்துவஞானம் எவ்வளவு அநுபவத்திற்குக் கொண்டுவரத்தக்கதோ அவ்வளவு கொண்டு வரப்படவில்லை. அத்தத்துவஞானம் நன்றாக அப்பியாசத்திற்குக் கொண்டுவரப்படின் நமது பாடசாலைகளில் வழங்கிவரும் கல்வி முறையானது முற்றிலும் மாற்றப்படவேண்டும். ஒவ்வொரு ஜீவனும் இவ்வுலகத்தி லவதரித்து வாலிப சரீரத்தை யடைந்த

போதிலும் அஜ்ஜீவனது வயது பாலியமல்ல. அநேக ஜன்மங்களாய் முதிர்ச்சி யடைந்திருக்கிறான். முன் ஜன்மங்களில் அவன் வெளியிட்ட நற்குணங்களையும் தீக்குணங்களையும் வாசனாரூபமாகத் தன்னிடத்தில் இந்த ஜன்மத்தில் மறைத்து உள்ளடக்கிக் கொண்டிருக்கிறான். எவ்வாறு வித்துக்கள் அவைகள் விழும் க்ஷேத்திரத்தினது தன்மையின் வேறுபாடுகளால் முளைத்துச் செழித்து வளர்ந்து ஓங்குவதும் அல்லது க்ஷீணதசையை அடைவதும் சுபாவமோ அதுபோல அஜ்ஜீவனானவன் ஒரு ஜன்மத்தில் இளமைப் பருவமுள்ள சரீரத்தை அடைந்திருக்குங்கால், அவனைச் சூழ்ந்துநிற்கும் குடும்ப சம்பந்தங்களும் அவன் கூடும் சகவாசங்களும் அவன் கற்கும் கல்வியும் அவைகளுக்குத் தக்கவாறு அவனுடைய பூர்வஜன்ம வாசனைகளை விகஸிக்கச் செய்கின்றன. முன்ஜன்மத்தின் துர்வாசனைகள் விகஸிக்காவண்ணம் அவைகளை நசித்துப்போகும்படி செய்யவும், நல்ல வாசனைகள் வெளித்தோன்றி பலமடையும் வண்ணம் அவைகளுக்கு வேண்டிய சாதனங்களை யமைக்கவும் வேண்டுவது அந்த ஜீவனுக்கு இந்த ஜன்மத்தில் பெற்றோர்களாயும் உபாத்தியாயர்களாயும் ஏற்பட்டவர்களுடைய கடமையாகுமன்றோ! இவைகளைக் கவனித்து பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் நடப்பார்களாகில் அவர்கள் புனர்ஜன்மம் என்ற தத்துவத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களாவார்கள்.

***

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வருஷமகோற்சவமானது சென்ற ஜூன்மீ 12-13உகளில் மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் கனம் யல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. அச்சமயத்தில் பல தமிழ் வித்வான்களாலும் அபிமானிக

ளாலும் பல வியாசங்கள் வாசிக்கப்பட்டு உபந்நியாசங்களும் செய்யப்பட்டன. திராவிட பாஷைகளில் முதன்மையானதும், தற்காலத்திலும்கூட அதினுடையஎழுத்துக்களாலும் சொற்களாலும் பாஷையின் அமைப்பாலும் வடமொழியினின்றுவேறுபட்டமொழியென்று காட்டுகின்றதுமானதமிழ்ஒரு புராதனபாஷை என்பதும்,வடமொழி ஆரியர்களுடன் இத்தேசத்திற்குவருமுன்,இந்நாட்டில்வழங்கிவந்த மொழியின்பிற்காலதிரிபே தற்காலத் தமிழ் எனலும் தகும்.வடமொழியில்இயற்றப்பட்டபலகிரந்தங்களை அநுசரித்து தென்மொழியிலும் பல நூல்கள் ஆரியர்களாலும்திராவிடர்களாலும் இயற்றப்பட்டு அந்த பாஷையானது சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் பாஷையின் சரித்திர ஆராய்ச்சியும் தமிழ் பாஷையிலுள்ள நூல்களுடையவும் நூலாசிரியர்களுடையவும் காலநிர்ணயமும் தமிழ் நாட்டின் சரித்திரமும் இன்னும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யப்படவில்லை. அவ்விதம் செய்வது மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப்பொறுத்து நிற்கின்றதென்று நாம்சொல்லுகிறோம். அச்சங்கத்தின மூலமாய் பல நூல்கள் வெளிப்பட்டிருக்கின்றன. மேற்றிசை சாஸ்திரிகளால் கொண்டாடப்படுகின்ற கிரிடிகல் ஸ்காலர் ஷிப் என்ற, பரிசோதிக்கும் இயல்போடுகூடிய வித்தையானது சங்கத்தாரால் அபிவிருத்திக்குக் கொண்டுவரத்தக்கது. அது பரவுமாகில் சங்கத்தின் வருஷ மஹோற்சவங்களில் வாசிக்கப்படும் சில வியாசங்களில் ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் ஏற்படுத்தப்படும் மேல் கீழ் என்ற வேறுபாடுகளுடன்கூடிய துவேஷத்தைச் சார்ந்தகோட்பாடுகள் மறைந்துபோகும்.

***

வங்காளத் துதித்து உலக முழுவதும் கீர்த்திபெற்ற, இந்திய பௌதிகசாஸ்திரி புரோபஸர் ஜகதீச சந்திரபோஸ்

என்பவர் தமிழ்ச்சங்கத்தார் முன்னிலையில் அவருடைய சாஸ்திர ஆராய்ச்சியைப்பற்றி ஜூன் ௴ 14உயில் ஒரு உபந்நியாசம் செய்தனர். பௌதிகசாஸ்திர பரிசோதனையில் அவர் சித்தாந்தப்படுத்தியது, மனிதசரீரம், பிராணிகள் சரீரம், புல், பூண்டு, கல் ஆகிய ஸ்தாவரஜங்கம வர்க்கங்களிலெல்லாம் தோன்றும் பிராணன் ஒன்றே என்ற தத்துவமாம். இவைகளில் தோன்றும் பிராணன் ஒன்று தான் என்று, இச்சரீரங்களில் சில சிகித்சைகளால் உண்டு பண்ணப்படும் சேஷ்டைகளை வெளித்தோன்றும்படி செய்கின்ற அதிநுட்பமாகிய யந்திரங்களால் ஸ்தாபிக்கின்றனர். இப்பூலோகத்தில் மனிதர்களால் அறியப்படும் பிராணன் ஒன்று தான் என்பது அத்வைத, விசிஷடாத்வைத மதங்களின் சார்பு என்றே சொல்லல் தகும். நமது தேசத்து மதாசார்யர்கள் அவர்களுடைய மதசித்தாந்தங்களைச்சுருதி யுக்திமுதலிய பிரமாணங்களால் ஸ்தாபித்திருக்கின்றனர். பௌதிகசாஸ்திர முறைகளால் ஐம்புலன்களுக்கும் கோசரமாகும் வண்ணம் ஒரே பிராணன் எல்லா ஜீவராசிகளிடத்தும் நிற்கின்றது என்று ஒரு இந்தியபௌதிக சாஸ்திரியால் நிரூபிக்கப்பட்டிருப்பது இந்துதேசத்திற்கு ஒரு கௌரவத்தை உண்டாக்கியிருக்கின்றது. அவருடைய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியால் வைத்தியம் விவசாயம், மநஸ்தத்துவ சாஸ்திரம் சைகாலஜி முதலியவைகளில் நூதன அபிவிருத்திகள் ஏற்படக்கூடியதென்றும் அந்த வழிகளில் நந்தேச மாணுக்கர்கள் பயிற்சியடையவேண்டுமென்றும் அவர் வெளியிட்டனர்.

***

பிரஹ்மஞான சபையின் உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் ஏ. பி. ஸின்னெட் என்பவர் "ரிஷிகளும் தற்கால யுத்தமும்" என்ற விஷயத்தைப்பற்றி ஒரு சிறிய கிரந்தம்

எழுதியிருக்கின்றனர். ஈசுவரனுக்குக்கீழ் இவ்வுலகத்தை ஸநத்குமாரர், மங முதலிய ரிஷிகள் ஆண்டுரக்ஷித்து வருகிறார்களென்பது சநாதன தர்மத்தின் பூர்வீக கொள்கைகளில் ஒன்றாகும். நாரதர் முதலிய பிரஹ்மரிஷிகளின் சம்பந்தத்துடன் இவ்வுலகத்தில் யுத்தம் நிகழ்வதை நாம் மகாபாரதத்தில் காண்கிறோம். இப்போது நிகழும் யுத்தம் உலகசரித்திரத்தில் சம்பவித்த யுத்தங்களில் அதிகோரமான யுத்தமென்று சொல்லப்படுகின்றது. யுத்தத்தில் சேர்ந்திருக்கும் ஜனத்தொகுதியாலும், நாசத்தை யுண்டுபண்ணும், ஆயுதங்களின் கொடுமையாலும், யுத்தம் வியாபித்திருக்கும் பிரதேசங்களின் விஸ்தாரத்தாலும், யுத்தத்தின் முடிவில் உலகத்தில் நேரும் பயன்களாலும் அதின் தன்மை நன்கு விளங்குகின்றது. முற்காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்ததென்று நம்முடைய பிராசீன கிரந்தங்கள் கூறுகின்றன. ஸீக்ரேட் டாக்டரின் என்ற குப்தவித்தை எனும் நூலில் தைத்தியர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் முன் செய்த கொடும்போர் போல தற்காலங்களிலும் உலகத்தின் விகாஸ முறையைத் தடைசெய்வோர்களாய் இவ்விதமே போர்புரிகின்றனர் என்று நமது அக்கிராசனாதிபதியும் உபஅக்கிராசனாதிபதியும் கூறுகின்றனர். இப்போது யுத்தம் புரியும் இருதிறத்தவர்களில் விகாஸமுறையைச் செலுத்துவோர்கள் யாவர், விகாஸமுறைக்குத் தடையாக நிற்பவர் எவர் என்பதை எவர் தர்மத்தை அனுசரிக்கின்ற பக்கத்தில் நிற்கின்றார். எவர் அநீதியானநோக்கங்களைக் கருதியிருக்கின்றனர் என்ற விஷயத்தை விசாரிப்பதின் மூலமாய் அறியஇயலும். குற்றமற்ற பெல்ஜியம் தேசத்தைப் படையெடுத்து வெற்றியடைய வேண்டுமென்பதை மட்டும் நாடி, அதை நாடுவதில் சாதனங்கள் தீதாயிருப்பினும் கைப்பற்றிக் குரூரத்தில் யாதொரு அருவருப்புமின்றி யுத்த சம்பந்தமில்லாத

பிரயாணிகள் செல்லும் லூஸிடானியா முதலிய புகைக்கப்பற்களைத் தாக்கியுடைத்து நிராயுதபாணிகள் ஸ்திரீகள், குழந்தைகள் முதலியவர்களை ஹிம்ஸிக்கும் ஜெர்மானியர்களே அசுரசுபாவத்தையுடையவர்கள். அவர்களும் அவர்கள் பக்கத்தைச் சார்ந்தவர்களும் உலகத்தின் விகாசமுறைக்குத் தடையாய் இப்போது நிற்கின்றூர்கள். அவரை எதிர்க்கின்றவர்கள் விகாஸமுறையை இப்போது செலுத்தும் கருவிகளாகிறூர்கள். உலகத்தில் ஒரு நூதன கல்பம் துவக்கப்போகின்றது. உலகத்தில் அதர்மம் அதிகரித்து தர்மம் குறையும் காலத்தில் ஈசுவரன் அவதரித்து அதர்மத்தை நாசம் செய்து தர்மத்தை ரக்ஷிக்கின்றூரென்று கீதாசாஸ்திரம் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள பிரகாரமே கலியுகம் 5,000ம் வருஷங்களுக்குப்பின்னர் சிறு உபகல்பம் ஆரம்பிக்கும் இச்சமயத்தில் தற்கால நாகரிகத்தின் அதர்மங்களும் துர்க்குணங்களும் ஒன்றுகூடி ரூபமெடுத்தாற்போல போர்புரியும் ஜெர்மானியரையும் இவர்கள் பக்கமிருப்பவர்களையும் தோற்கச்செய்வதால், நமது நாகரிகத்தின் துர்க்குணங்கள் நீங்கி அது புனிதமாகி அபிவிர்த்தியடைய, ஜகத்குருவின் அவதாரத்தை இந்த யுத்தமானது த்வரிதப்படுத்துகின்றது.

***

கொள்ளேகாலம் என்ற ஊரில் நாளிதுமீ 10, 11 தேதிகளில் பிரஹ்மஸ்ரீ டி. இராமச்சந்திரராவ் பி. ஏ., பி. எல் அவர்களுடைய அக்கிராஸநத்தின் கீழ், பிரஹ்மக்ஞான மஹாசபை ஒன்று கூடியது. மைஸூர் இராஜ்யத்தின் பற்பல பாகங்களினின்று பலர் சென்றிருந்தனர். உள்ளூர்க் கிளைச்சபைக் காரியதரிசியவர்கள் அயலூர்களி

விருந்து வந்த எல்லோருக்கும் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தார். அன்று சாயங்காலம் அக்கிராசனாதிபதியவர்கள் ஆங்கில பாஷையில் "தியாஸபியும் ஹிந்து மதமும்" என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். மறுநாட் காலையில் அக்கிராசனாதிபதியவர்கள் "உதயதிசை நக்ஷத்திர ஸங்க"த்தைப் பற்றிப் பேசினார்கள் அன்றுசாயங்காலம் மைசூர் மகாராஜா காலேஜ் உபாத்தியாயர் ஸ்ரீமான் வெங்கடேசஐயர் அவர்கள் கன்னடபாஷையில் "எண்ணங்களின் சக்தி" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார். அக்ராஸனர் அவர்களின் முடிவுரை பஞ்சயக்ஞத்தைப் பற்றி நிகழ்ந்தது.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

உடுத்த துகிலவிழ்த்து விரித்தொருதரை யிற்றனித்தே யுன்னுது முன்னியுளத்துறு கலக்கத்தோடே; படுத்தயர்ந்த சிறியேன்றனருகணைந்து மகனே பயமுனக் கென்னென் றென்னைப் பரிந்து திருக்கரத்தா, லடுத்தணைத்துக் கொண்டெடுத்துப் போய்ப் பிறிதோரிடத்தே யமர்த்தி நகைத்தருளிய வென்னாண்டவனே—யரசே, தொடுத்தணியென் மொழி மாலை யணிந்து கொண்டென்னுளத்தே சுத்த நடம்புரிகின்ற வித்தசிகாமணியே.—திருஅருட்பா.

---

75

## பரமர் வரும் வழியிற் பிரயத்தனங்கள்.

---

அதிக ஸமீபகாலத்தில் போதிஸத்வா வருவதற்குற்ற காரணங்கள் பல. அவர் வருவது நிச்சயம். அவருடைய எண்ணங்களைப் பூர்ணமாய் இவ்வுலகத்தில் நாம் நிறைவேற்றவேண்டுவ தவசியம். அவர் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு, நாமேன் பிரயத்நம் செய்யவேண்டும்? என்று சிலர் கேட்கலாம். அவர் வந்தால் அவரே பேசிக்கொள்ளட்டுமே. அவர் வந்தால் உலக முழுவதும் எப்படி நம்பாமலிருக்கும்? அவர் பரம புருஷராயிருந்தால் உலகம் அவரை எளிதில் அறிந்துகொள்ளாதா? நாம், அவர் வரப்போகின்றார் என்று, முந்தியே ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டுப் பிரஸித்தம் செய்யவேண்டும் என்று பலர் சொல்லக்கூடும்.

முதலில் பாலஸ்டைனில் ஜகத்குருவானவர் கிறீஸ்துவாகத் தோன்றினபொழுது, அவரை யெல்லோரும் துவேஷித்து, மூன்று வருஷங்களுக்குள் அப்பெரியாரை யூதர்கள் உயிரோடு சிலுவையிலறைந்து விட்டார்கள் என்ற விஷயம் சரித்திர ஆராய்ச்சி உடைய எவரும் அறிந்ததே. மறுபடியும் இப்பொழுது அவதரிக்கப்போகிற ஜகத்குருவும் அந்தப்படியே உயிர் துறக்கும்படியும், ஜநங்களும் பிரயோஜன மடையாதவர்களாகவும் ஏற்படலாகாதென்று நினைப்போமாயின், நாம் அவர் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு ஜனங்களுக்கும் அவர் வரப்போகிறாரென்ற சமாசாரத்தை முன் தூதர்களாக நின்று அறிவித்தல் வேண்டும். அவருடைய வேலைக்கு, ஏற்படக்கூடிய சிரமம், அதனால், சற்று குறையும். கிறிஸ்துவாக அவதரித்த, சமயம்போல, இச்

---

* மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்களின் பிரஸங்கத்தினின்று எடுத்தெழுதப்பட்டது.

சமயமும் துன்பப்பட வேண்டிவராதல்லவா? அவரே முன் கௌதம புத்தராக அவதரித்த மற்றொரு சமயம், அவ்வளவு கஷ்டப்படவில்லை யென்பதையும் யாவருமறிவர். கௌதமபுத்தர் வந்தபோது குழப்பம் வெகுவாயில்லை, ஏனெனில் ஜனங்கள் ஒருவாறு அவர் வரவை எதிர்பார்த்தவர்களாகவே இருந்தார்கள், அதனால் அவரை அநேகர் நன்கு மதித்து, அன்புடன் ஆதரித்தனர். தற்காலத்தியரோ, அவ்வித அன்பினால் இரக்கமுடையவரை தைர்ய மற்றவர்களெனக் கூறுகிறார்கள்! புத்தருடைய உபதேச மொழிகளையும் இலேசாய் ஏற்றுக்கொள்ளாத பலரும் அக்காலத்திலிருந்தனர். ஆயினும் அவர் 40 வருஷகாலம் இப்புவியிலிருந்து பிறகே இவ்வுலகை நீத்தனர்.

அவருக்குப் பிறகு கிறிஸ்து வந்தபொழுது, அவரை ஜனங்கள் இடையறாத வெறுப்போடு துவேஷித்து, அவரை எப்படியாவது கொன்று விடவேண்டுமென்றும் நினைத்துச் சிலுவையிலறைந்ததனால், அவர் சீக்கிரம் இவ்வுலகத்தினின்று மறையவேண்டி வந்தது. அவரும் தாம் வந்த காரியம் முடிந்ததென்று நினைத்தவுடன் தம்மிருப் பிடத்திற்கேகினார். அவர் எடுத்துக்கொண்ட சரீரத்திற்கு மட்டும் அழிவு ஏற்பட்டதேயொழிய, ஆத்மாவுக்கு ஒருநாளும் மரணமே கிடையாது என்னும் உண்மையை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதவசியம்.

மறுபடியும் ஜகத்குரு உலகத்தில் ஜனங்களுக்கு முன்போலவே நல்ல உபதேசங்கள் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார். ஸதாஸர்வ காலமும் பனியால் மூடப்பட்ட உயர்ந்த ஹிமாலய பர்வதங்களின் தாழ்வரைகளில்வசித்துக்கொண்டு விசாலமான இந்தியதேசத்துப் பள்ளத்தாக்குகளை வெகு அன்போடும் கண்ணுற்றவராய் எப்போது இங்

துதேசத்தில் நாம் அவதரிப்போம், எப்போது அதற்கேற்ற காலம் வரும் என்ற எண்ணம் கொண்டவராய் எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கின்றனரன்றே!

நாநாவித ஜாதியார்களுக்குள்ளும் நாநாவித தேசங்களிலும் பரமருடைய திருவரவைப் பிரஸித்தப் படுத்தி, அவரை அன்புடன் ஆதரித்து வரவேற்கத் தக்க பலரை, ஒருங்கே சேர்த்து ஒத்துஉழைக்கும்படி செய்வதற்கே நம் உதயதிசை நக்ஷத்ரஸங்கம் வேலைசெய்து வருகின்றது! ஆதலால், இக்காலத்தில், கிறிஸ்துவின் அவதாரத்திற்போல, நம் மஹானின் சரீரத்திற்கு ஹானி ஏற்படுதல் இயலாது. அவர் இனி வருங்காலத்தில் எத்தேசம் சென்றாலும், அங்கும் அவரை ஆதரிக்கக்கூடிய சிலராவது ஏற்பட்டிருப்பரன்றே! அவர் அவதாரமஹிமையையும், அவருடைய அவதாரத்தின் உயர் நோக்கத்தையும் அறியக்கூடியவர்கள் சிலராவது ஏற்படுவரன்றே! அவர் மஹா கருணாமூர்த்தியாகவும், ஞானமூர்த்தியாகவும் இருப்பதனால் மட்டும் வெளியுலகத்தார், அவரைப் பரமாசார்யரென்று அறிந்துகொள்ளல் இயலும். ஆயினும், ஏற்கனவே அவருடைய கைங்கர்யத்திற்கென்று தம்மைத் தியாகஞ் செய்துகொண்டு, திடமாய் விரதங்கொண்ட சிலருக்கு மாத்திரம், ஞான அநுக்ரஹத்தால் வழிநடத்தும் அப்பரமர் இப்போதே பிரத்யக்ஷமாயிக்கிறார். அவர்கள் தான் அவரைப் பற்றிப் பிறருக்கெடுத்துச் சொல்லிப், பிறரையும் அவரிடத்துச் சேர்ப்பிக்க இயலுவார். நம் பரமாசாரியர் கிறிஸ்துவாக அவதரித்த காலத்திலும் மிகச்சொற்பம் பேர்கள் தான் அவரை உண்மையிலறிந்து கொண்டவர்கள், அப்போது அவர்கட்கு நம் மஹான் சொல்லிய தென்னவெனில்:-" நான்தான் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லாதே" என்றதேயாம், அம்

மட்டில், இந்த புருஷன்தான் கிறிஸ்து என்பது அக்காலத்திலேயே பஹிரங்கப் படுத்தப்படவில்லை. ஆனால், அவருடைய பிரவசனங்களாலேயே அவர் தான் பரமபுருஷன் என்று, பிறர் அவரை அறிந்துகொண்டார்கள். முதன்மையில் உங்கள் ஹிருதயங்களில் அவர் தங்கியிருக்கும்படி செய்துகொள்ளுங்கள், பிறகு லோகத்தில் என்ன ரூபத்தோடு தோன்றுவார் என்பதை நிச்சயிக்க இயலுவீர்கள்.

ஆகவே அவர் வருமுன் நாம் செய்யவேண்டிய பிரயத்நங்கள் இருவகைப்படும். முதலில் நம்மையேசீர்திருத்திக்கொண்டு சித்தசுத்தி பெறவேண்டும். அதாவது, பக்தியினாலும், எங்கெங்கு உபகாரிகள் தேவையோ, அங்கங்கு போய் நம்மாலியன்ற வுதவியைச் செய்வதனாலும், சுயநயமான ஆசைகளைத் துறத்தலினாலும் அது இயலும்: இது முதலிற் செய்துமுடிக்கவேண்டிய பெரியபிரயத்நம். பிறகு நம் சீலத்தில் பக்தியென்னும் குணத்தை மேன்மேலும் கொஞ்சங் கொஞ்சமாய் வளர்க்கக் கடவோம். உன் ஹிருதயத்தில் மனஎழுச்சி எச்சமயம் உண்டாகின்றதோ, அச்சமயமே நீ உணருகிற பக்தியானது கொஞ்சமும் தடையின்றி உலகமுழுமையும் வியாபித்து வெளியுலாவட்டும். அப்பக்தி வெள்ளமானது பூர்ணமாகவும் தங்கு தடையின்றியும் பிரவகிக்கட்டும். அதனால் சேதம் ஒருபோதும் ஏற்படாது. நன்மையே எப்போதும் விளையும். மஹிமையையும் பெருமையையும் எங்கெங்கு பார்ப்பாயோ, அங்கெல்லாம் நீ கௌரவம் பாராட்டக் கடவாய்: இவ்விதம் பழகுவாயானால் பரமாசாரியரை அவர் அவதரிக்கும்போது இலகுவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இனிப் பரமர் வருந்தருணத்தை, வெளியுலகத்தாரும் நம்முடன் ஒருமித்து, எதிர்பார்க்கும்படி, நாம் எவ்விதம்

முயற்சிக்க வேண்டியவர்கள் என்பதைச் சிந்திப்போம். துவேஷபுத்தியுடன் அநாதரவு செய்யக்கூடியவர்களென்று தெரியுமானல், நம் நற்செய்தியை வீணுய் அவர்களிடம் சொல்வதின் மூலம் அதிக துவேஷத்தை விருத்திசெய்ய வேண்டாம் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குரிய ஸ்நேகிதர்களிடத்துமட்டும் திருவரவின் செய்தியைப் பிரசித்தப்படுத்துங்கள். உங்கள் ஸ்நேகிதர்களின் ஜாதி மதங்களுக்கு ஒத்தபடி, நீங்கள் அவர்கட்குச் சொல்லும் விதமும் வேறுபடும். இதில் நீங்கள் கொஞ்சம் விவேகத்துடன் உழைக்கவேண்டும். ஹிந்துக்களுக்கு நீங்கள் இச்செய்தியைச் சொல்வதாயிருந்தால், "தர்மம் குன்றி, அதர்மம் ஓங்கவே, யான் சீர்திருத்துவதற்கு அவதரிக்கிறேன்." என்று கீதையிற் சொல்லப்பட்டிருக்கிறதை யெடுத்துக் காட்டியும், அதற்கேற்ப ஸங்மார்க்கமுறையே தற்காலத்தில் முற்றிலும் க்ஷீணித்து இருப்பதை அவர்களுக்கு விளக்கியும் அதனல் தற்காலத்தில் ஒரு மஹானுடைய வரவு தேவையென்றும், இவ்விஷயமாக இன்னும் பல சாஸ்திர ஆதாரங்களுடன் போதியுங்கள். கிறிஸ்தவ தேசங்களிலும், அவர்கட்குரிய வேதங்களிலுள்ள ஆதாரங்களோடு, நாம் எடுத்துரைக்கவேண்டும். நம் ஸங்கத்தில் சேராத பல கிறிஸ்தவர்களும் ஏற்கனவே, கிறிஸ்து இரண்டாவது தரம் தோன்றப்போவதாக அபிப்ராயப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். சொற்பகாலத்திற்கு முன் இறந்துபோன, கிறிஸ்தவ போதகர் ஒருவரின், மனைவியார் தாம் கண்ட தரிசனத்தால் கிறிஸ்து என்பவர் கூடிய சீக்கிரம் வரப்போகிருர் என்று, அம்மத அதிகாரிகளுக்கு அறிவித்து, உடனே அச்செய்தியை எல்லோருக்கும் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக் கொண்டனர். அத்தகைய கிறிஸ்தவர்கள் அநேகர் இப்போது உதயதிசை நக்ஷத்திர ஸங்கத்தில் சேருகின்றனர்.

ஆகையால் இவ்வோரே உண்மையைப் பற்பல விதமாய் வெவ்வேறு ஸ்வபாவஸ்தர்களுக்கு எவரெவர்களுக்கு எந்தெந்த வழியில் ருசியுள்ளதோ, அந்தந்தவழியாய் அவரவர்களுக் கூட்டவேண்டும். அப்போதுதான் உங்களுடைய பிரயத்நமானது நன்றாய் சித்திபெறும். பிறரை நல்வழிப் படுத்துவதில் முயலவேண்டியவர்கள் நீங்களேயாதலால், எளிதாகவும், மிகப் பிரயோஜனகரமாகவும் எவ்வெவ்வழிகளால் முயற்சிக்கலாம் என்பதை நீங்களே நன்கு தீர்மானிக்கக் கடவீர்கள். இவ்விதம் செய்வீர்களாகில் அவர் திடீரென்று தோன்றாமல், ஜநங்கள் முன்னடியே அவர் வரவை எதிர்பார்த்து அவரை வரவேற்கத் தயாராயிருக்கும் சமயத்தில் அவதாரம் நிகழ்வதாகவும் முடியும். ஏனெனில், இந்த ஸ்தூல உலகில் பலர் லோககுருவை எதிர் பார்க்கின்றார் எனின், ஏற்கனவே ஸூக்ஷ்ம லோகத்தில் ஸம்பவித்தாய்விட்டதென்பதும், அதன் பிரதிபிம்பமே ஸ்தூல உலகில் தோன்றி அவர் எதிர் பார்க்கப் படுகின்றார் என்பதும் மறத்தற்பாற்றன்று.

இவைதான் நீங்கள் செய்யவேண்டிய அவசியமான பிரயத்நங்கள். உங்களுக்குள்ளேயும், உங்களுக்குப் புறம்பாகவும், நீங்கள் ஆயத்தம் செய்தல்வேண்டும். மேற்கூறிய வழிகளில் நீங்கள் அன்போடும், அறிவோடும் பிரவிர்த்திப்பதுடன், பிரபுவின் வருகையை எதிர்ப்பார்க்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படாதீர்கள்.

R. சேஷாசாரியர்.

---

## ஓர் கடிதம்.

---

ஆரியர்களே!

நமது மகிமைதங்கிய இப்பரதகண்டம் ஆசந்திரார்க்க பர்யந்தம் செழித்தோங்கி வளர்வதற்குக் கருணைகொண்டிருக்கும் மஹாபுருஷரின் உத்தரவின் பிரகாரம் பிரசுரப்படுத்தும் பாலனாகிய என் வார்த்தைகளைக் கவனித்து குணகிராஹிகளாயிருக்கிற தாங்கள் நான் எழுதும் வாக்யங்களில் சொல்நயம் முதலிய அலங்காரங்களில்லையென்றும், ஏதோ பைத்தியம் பிடித்துப் பிதற்றுகிறான் என்றும், அனுதரவு செய்யாமல், மஹானின் உத்தரவைத்தெரியப்படுத்துகிறான் என்று எண்ணி லோகாபிவிருத்தியில் எப்போதும் கவலைகொண்டிருக்கும் சாதுஜனங்களுக்கு விநயபூர்வமாய் தெரியப்படுத்துகிறேன்.

என் பந்துக்களுடன் ராமேசுவரம் போயிருந்தகாலத்தில் சென்ற ஆனந்தஹூ தைமீ 12வ கார்த்திகை அன்றையதினமும் அவ்விடமே யிருந்தேன். சுவாமி தர்சனம் செய்ய தனிமையாய் ராத்திரி 8மணி சுமாருக்குச் சென்று பகவத்தர்சனம் செய்து திரும்பி பெரிய நந்தியின் சமீபம் வரவும், திடீரென என்பார்வைக்கும் மனதிற்கும் பீதியான ஒரு தோற்றம் காணப்பட்டது. அப்பால் ஒரு விநாடியில் ஆச்சர்யமான காந்தியுடன்கூடிய ஒருமஹான் நிற்கக்கண்டேன். இன்னது என்று புலப்படாமல் பீதியுடனும் ஆச்சர்யத்துடனும் இருக்கும் என்னைப் பார்த்து கருணையான பார்வையுடன் பின்வருமாறு பகர்ந்தார்.

இப்பரத கண்டத்தில் ஒவ்வொருவரும் ஸ்வதர்மானுஷ்டானத்தைவிட்டு நழுவித் தாங்கள் கெட்டதுமன்றி மிகப்பரிசுத்தமான பிரதேசங்களையுடைய இப்பரத பூமியையும் அசுசியானதாய்ச் செய்துவிட்டார்கள். அது

விஷபம் சேர்ப்படுத்த கல்யப்தம் 5045 வாக்கில் அவதாரம் செய்யவேண்டி யிருப்பதால், அதற்குமுன் பிரதேசங்களை பரிசுத்தமாக்க பின்வரும் கட்டளையை லோகோபகாரார்த்தமாய் உன்னால் தெரியப்படுத்த வேண்டியிருப்பது அவசியம் என்றறியவும் என மொழிந்தார்.

அதற்கு நான் அம்மஹானை நமஸ்கரித்து ஸ்வாமிந்! தற்காலமுள்ள நிலைமையில் லோகத்திலுள்ள சிலர் என்னை ஏதோ அறிவீனமாய் உளருகிறான் என்று மிகப்பரிகசிப்பார்கள். தவிரவும் வித்யா விஷயத்திலாவது மற்ற லோகோபகாரமான காரியங்களை நிர்வகிக்கத்தக்க புத்திசாலியாகவாவது ஏராளமான திரவியவானாகவாவது அனுஷ்டானாதிகளிலாவது ஒரு விதத்திலாவது யோக்யதை யல்லாத அற்பனான என்னிடம் உத்தரவு செய்வதைப் பார்க்கிலும், அவைகளை நிர்வகிக்கக்கூடிய பெரியோர்களிடமாவது ராஜாதிராஜாக்களிடமாவது உத்தரவாகவேண்டுமென்று பயத்துடன் வணக்கமாய் அறிவித்தபொழுது, புன்சிரிப்புடன் அந்தக்கவலை நீ கொள்ளாமல் என் உத்திரவை மறுக்காமல் சொன்னபடி உன்னால் கூடுமானவரை பிரயாசப்படுவதில் பின்வாங்காதே, இதுவே உன் கடமை என்றார்.

அதாவது (தர்ம அரசாங்கமான ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட நமது) இந்தியாவின் வடகிழக்கு பாகத்தில் கங்காநதி தீரத்திலும் தென்கிழக்கு பாகத்தில் காவேரி நதி தீரத்திலும் தென்மேற்கு பாகத்தில் கேரள ராஜ்யத்திலும் வடமேற்கு பாகத்தில் சிந்துநதி தீரத்திலும் மத்யபாகத்தில் நர்மதா தீரத்திலும் ஆக இவ்வைந்து பிரதேசங்களிலும் செழிப்பான ஒவ்வொரு இடத்தில் மாத்திரம் விதிப்படி பஞ்சாயதனஸ்தாபம் செய்து பிராஹ்மணோத்தமர்களால் வேதோக்தமான வைபவத்துடனும் சந்தர்ப்பணைகளுடனும் நாமசங்கீர்த்தனாதி பஜனைகளுடனும் ஆராதிப்பதும் தவிர,

தர்சனார்த்தம் வரும் பக்தர்களுக்கு சகல சௌகரியங்களுடன் தர்சனம் செய்து வைக்கவேண்டுமென்றும், இப்படி நடத்தப்பட்டால் அவதரிக்க பிரதேசங்கள் பரிசுத்தமடைவதும் தவிர இவ்வுலகமானது செழிப்படைவதோடு வியாதி முதலியவைகளால் ஏற்படக்கூடிய சகல கஷ்டங்களினின்றும் விடுபட்டு மேன்மையடையும் என்றுமாக் ஞாபித்தார்.

அது முதல் பலவிதத்திலும் ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது அதே சுந்தரபுருஷன் சென்ற மஹாசிவராத்திரி யன்றையதினமும் இரவு $3\frac{1}{2}$மணி சுமாருக்கு கனவு என்று நிச்சயமாய் சொல்லக்கூடாதநிலைமையில் ஹூம்கார சப்தத்துடன் என்னுக்ஞையை முடிக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் உலகம் கெட்டுப் போவதற்கு நீயே காரணமாவாயென்றும் சொல்லி மறைந்தார்.

சகோதரர்களே! இந்த உத்தமமான காரியம்போல், எவ்வளவோ காரியங்கள், எத்தனையோ சாதுக்களுக்கு. உத்தரவாய் அந்தப் பிரகாரம் நடத்தப்பட்டு, அந்தந்தக் காலங்களில் எவ்விதம் நம்முன்னோர்கள், க்ஷேமலாபங்களை அடைந்தார்களோ அவ்விதமாகவே லோகாபிவிருத்திக்கு ஹேதுவான இச்சிரேஷ்டமான காரியமும் இரண்டு மூன்று வருஷங்களுள் முடிவுபெற்று நம் ஆர்ய சகோதரர்கள் அனைவரும் இஹத்தில் அதிவைபவத்தையும் பரத்தில் முக்தியையு மடைவார்கள் என்பது திண்ணம். அப்படிக் கல்லாமல் மஹானின் உத்தரவுப்படி என்னால் தெரியப்படுத்தப்பட்ட வார்த்தைகளில் சந்தேகப்பட்டு அவரவர்களின் ஐஹிகாமுஷ்மிக பலன்களை இழக்காமலிருக்கும்படி விநயத்துடன் பிரார்த்திக்கிறேன்.

ஆகையால் ஆர்ய மதாபிமானிகளான சகோதரர்களே! அப்பேர்ப்பட்ட காரியத்தை ஆங்காங்குள்ள ஸ்ரீமான்களும் வித்வான்களும் பக்திமான்களும் ஒன்றுகூடி கருணாநிதியின் சர்வோபகாரமான ஆக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்றும் உதாசீனமாயிருக்க வேண்டாமென்றும் பாலனாகிய நான் விநயத்துடன் மன்றாடிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓம் தத் ஸத்.

தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி
(மேல்மங்கலம்.)

---

## நன்மொழி.

---

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை நம்புமினோ நமரங்காணற்றருணமிதுவே, வானுரைத்த மணிமன்றில் நடம்புரி யெம்பெருமான் வரவெதிர் கொண்டவனருளால் வரங்களெல்லாம் பெறவே, தேனுரைத்து முளமினிக்க வெழுகின்றே னீவிர்தெரிந் தடைந்தென்னுட னெழுமின் சித்திபெறலாகும், ஏனுரைத்தே னிரக்கத்தா லெடுத்துரைத்தேன் கண்டீர்யா னடையுஞ் சுகத்தினைநீர் தானடைதல் குறித்தே.

திருவருட்பா.

---

# சுதேச ஊழியர்களின் சங்கம்.

—

இந்தச் சங்கமானது:—உலகத்தில் மானிட ஜன்மம் எடுத்த ஒவ்வொருவரும் தான்பிறந்த ஜனனபூமியின் க்ஷேமத்தைக் கருதித் தம்மாலியன்ற உதவிகளைச் செய்ய கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுவதற்கும், அவ்விஷயத்தைத் தெரிந்து கொண்டவர்களை சுதேச கைங்கர்யத்தில் உழைந்துப் பேரும் புகழும் பெற்றுப் பிரபலமடையச் செய்வதற்கும் இவை காரணமாக நம் தாய்நாடு எவ்விதத்திலும் செழித்து க்ஷேமத்தை யடைவதற்குமாகவே ஈசுவரகிருபையை முன்னிட்டு ஸ்தாபிக்கப் பெற்றதாகும்.

இந்த சங்கத்தின் அங்கத்தினராகச் சேருதற்கு உரியவர்கள் தாங்கள் நாள்தோறும் செய்யும் நற்செய்கைகளாலே, அன்னியர்களையும் சுதேச க்ஷேம அபிவிருத்திக்கு ஏற்பத் தம் கடமைகளை உற்சாகத்தோடும் செய்யும்படிக்குத் தூண்டுதல் செய்பவர்களாயும், தங்களுக்குள் பலவிதமான ஜாதி, மத பேதங்கள் இருந்தாலும், அவற்றைப் பாராட்டி ஒருவரை ஒருவர் பிரியாது, அவரவர்கொண்ட கொள்கைகளுக்கு விரோத மில்லாமலே, நாம் எல்லாரும் இந்திய மாதாவாகிய ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்கள், என்று எண்ணி நம் தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளை எந்த வகுப்பினராக விருந்தாலும் மனவொற்றுமையுடன் செய்துமுடிக்கும் ஸ்வபாவமுள்ளவர்களாயும், இருத்தல் வேண்டும்.

இவ்வித அங்கத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தியாவின் பொது க்ஷேமத்தையே முன்னோக்கமாகக் கொண்டு, படிப்பறியாத சாமானிய ஜனங்களுக்கும் இவ்

வுண்மையைத் தெரிவித்து, ஜனசமூக ஒற்றுமைக்கு விரோதமான பலவித காரணங்களையும் ஒழித்து ஒற்றுமையை விருத்திசெய்து வரவேண்டும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய வழிகள்.

இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மஹா சபையானது சென்ற டிசம்பர்ம்ீ கூடியபொழுது சுதேசாபிமான சீலர்களாகிய சில மேதாவிகள் இந்த மஹாசபையின் நோக்கங்களெல்லாம் இப்பொழுதைப்போல ஆங்கிலங்கற்ற சிலருக்குமட்டும் தெரிந்ததாக இருக்காமல், இனிமேல் சாமானிய ஜனங்களும் தெரிந்துகொள்ளும்படி ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும், அவ்வாறு தெரிந்துகொண்ட சாமானியர்களோடும் கலந்துகொண்டு படித்த வகுப்பினர்கள் கிராமங்களிலும் பொதுஜன சபைகள் ஏற்படுத்தி ஸ்வதேசத்திற்குச் செய்யவேண்டிய நன்மைகளைக் காலதேசங்களுக்கேற்பத் தீர்மானிக்க வேண்டுமென்றும், அங்ஙனம் கிராம சபைகளிலும் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களை காங்கிரஸ் மஹாசபையார் ஏற்றுக்கொண்டு அக்கிராம நகரவாசிகளையும் காங்கிரஸ் மஹாசபையில் அபிப்ராயம் கொடுக்கும் பாத்தியதையுடையவர்களாக்க வேண்டுமென்றும் இவ்வேற்பாடுகள் அடுத்த காங்கிரஸ் மஹாசபை நடைபெறுவதற்குள் செய்யப்பட வேண்டுமென்றும், அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

அவ்வபிப் பிராயத்திற்கிணங்கப் பிரவிர்த்திப்பதே நம் சங்கத்தின் கடமையாகும்.

இம்முறையில் முயலவேண்டிய முயற்சிகளுள் முதன்மையானது.

1. வாரம் ஒருமுறை ஞாயிற்றுக்கிழமைகளில் அயலூர்களுக்குச் சென்று ஜனசமூக ஒற்றுமை, கல்வியின் ஆவசியகம், ஜனங்களின் சுகாதார விளக்கம், தாங்கள் செய்யும் காரியங்களை, குறித்த காலத்தில் செய்தல், வருவாய்க்குத்தக்கசெலவு, கோர்ட்டு விவகாரங்களை விலக்குதல், ஒருவருக்கொருவர் உபகாரியாயிருத்தல், விவசாயத்தின் அபிவிருத்தி, கிராமப் பஞ்சாயத்தின் ஆவசியகம், முதலிய விஷயங்களைப் போதிப்பதோடும்,

2. இவைகளுக்குச் சாதகமாக நிழற் படக்காட்சிகளோடு கூடிய பிரசங்கங்களும், துண்டுப் பத்திரிகை அச்சிட்டு எல்லோருக்கும் இனமாகக் கொடுத்தலும், தனித் தனி உபந்யாஸங்களும் செய்யவேண்டும்.

இச்சங்கத்தார் அப்போதைக்கப்போது செய்துவரும் காரியங்களைப் பிரசுரப்படுத்துவதற்கும், மேற் செய்கைகளில் நடைபெறும் அறிஞர்களின் உபன்யாசங்களை வெளியிடுவதற்கும் உபகாரஞ்செய்ய இப்பொழுது நடைபெற்று வரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை சித்தமாய்க்காத்துக்கொண்டிருக்கிறது.

நாம் மேலே விரும்பிய (மாஜிக்லாண்டனும்) புகைப்படமும் இச்சங்கத்தார் வசமிருக்கிறது.

இச்செய்கைகளுக்கு ஆரம்பமாக இச்சங்கத்தினருள் ஒருவர் பூர்ணசந்திரோதயத்திற்கு அரிய வியாஸங்கள் எழுதிக்கொண்டும் மற்றொருவர் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறுவர்களுக்குநற்போதனைகள்செய்துகொண்டும் வருகிறார்கள். இன்னொருவர் நிழற்படக்காட்சியின் மூலமாய்ப்படிப்பித்து வருகிறார்.

இக்காரியத்திற்குப் பொதுவாக இந்தியர்களுடைய அபிமானமும் அதிலும் இதுபொழுது மதுரை ஜில்லாவாசி

களுடைய சகாயமும் வேண்டப்படுவதோடு அவர்கள் திரவியத்தாலோ, கல்வியாலோ, செல்வாக்காலோ, மற்று எவ்விதத்தாலும் செய்யும் உபகாரங்களும் விரும்பத்தக்கனவாகும்.

இதிற்சேர விரும்புவோர், அடியிற்கண்ட விதமாக மனுசெய்து கொள்ளவேண்டும்.

இச்சங்கத்திற்கு மாதச்சந்தா செலுத்தவேண்டிய கட்டாயமில்லை. ஆனல் பிரதிமாதமும் ஸ்வதேசத்தின் பொது க்ஷேம அபிவிருத்திக்குரிய கைங்கர்யங்களைச் செய்து தீரவேண்டும். அவரவர் தத்தம் தகைமைக்குத்தக்க பிரவிர்த்திகளைக் கொள்ளலாம்.

அப்பிரவர்த்திகளை எமக்கு இன்ன என்று தெரிவித்தல் வேண்டும்.

"நம்தாய் நாட்டின் கௌரவத்திற்குக் குறைவான எக்கார்யத்தையும் விலக்கி, நம்முடைய இந்தியஜன சமூகம் ஒற்றுமையடைதற் கேதுவான நற்காரியங்களை நாடுவேன்" என்ற உறுதிமொழியுடன் விண்ணப்பம் செய்ய வேண்டும். பதினெட்டுவயதுக்கு மேற்பட்டவர்களே இதில் மெம்பராகலாம். பெயர், வயது, விலாசம் இவைகள் குறிப்பிடவேண்டும்.

B. S. இராமசுப்பையர்.
பிரஹ்மக்ஞான மந்திரம்,
மதுரை.

---

## நன்மொழி.

இப்பிறவியில் நீதிநெறியிற் சென்று ஸந்தோஷமாயுள்ளவன், அவனுடைய அடுத்த ஜன்மத்தில் இன்னும் அதிக ஸந்தோஷ முள்ளவனவான் என்பது நிச்சயம்.

## மே மாசம்.

(15) சமர்த்தனாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்றாவது உலகத்தார் மெச்சப் பிரகாசிக்க வேண்டுமென்றாவது இச்சிக்காதே. பேச ஆசைப்படாதே.

(16) சொற்பப் பேச்சுடனிருப்பது நலம். நீ பேச விரும்புவது சத்தியமாயும், பிரியமாயும், ஹிதமாயு மிருக்குமென்று முற்றிலும் நிச்சயமா யிருந்தாலொழிய, மௌனமே நல்லது. நீ பேசப்போவதில், இம்மூன்று நிபந்தனைகளும் இருக்கின்றனவாவென்று நீ பேசுமுன் நன்றாயாலோசித்துப்பார். இவைகளில்லாவிடில் நீ அதைப் பேசாதே.

(17) இதுமுதலே நீ பேசும்போது ஜாக்கிரதையுடன் ஆலோசித்துப் பேசும் வழக்கத்தில் நீ ஏற்படுவது நல்லது; ஏனெனில் தத்துவோபதேச தீக்ஷை பெறவரும் சமயம் உனதுவார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்க வேண்டிவரும். இல்லாவிடில் சொல்லக்கூடாததை நீ சொல்லிவிடக்கூடும்.

(18) சாதாரணப் பேச்சில் அதிக காலங்கழிப்பது அநாவசியம், அது மூடத்தனமுமாம். அது வம்புப்பேச்சாய்விட்டால் பாபகரமாகிறது.

(19) ஆகையால், நீ பேசுவதைவிடக் கேட்டுப்பழகு. நேரே விரும்பினாலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே.

(20) அறிதல், துணிதல், (ஸங்கல்பித்தல்) தொடங்குதல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச் சொல்வதும் ஒரு முறை! இந்நான்கில் கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

(21) உனக்குச் சொந்தம் என்ற பாவனையை நீ ஒழித்து விடவேண்டும்.

(22) இதர மனிதர்களுடைய காரியங்களில், அநாவசியமாய்த் தலையிடுகிறதாகிய சாதாரணமான வழக்கத்தில்

விருப்புக்கொள்ளாதே, நீ கண்டிப்பாய் இவ்வாசையை அடக்கிவிடவேண்டும்.

(23) இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன, எவ்வித அபிப்பிராய முள்ளவனானாலென்ன, இவைகள் உன்னுடைய காரியங்களல்ல, அவைகளை அவனிஷ்டப்படி நடத்திக்கொள்ளும்படி விட்டுவிட நீ பயிலவேண்டும்.

(24) வேறொருவனோடு தலையிட்டுக் கொள்ளாதவரையில், தன்னிஷ்டப்பிரகாரம், ஒருவனுக்கு நினைக்கவும், பேசவும், செய்யவும் பூர்ணஸ்வாதீனமுண்டு, எது சரியென்று உனக்குத் தோன்றுகிறதோ, அதை ஸ்வேச்சையாய் செய்ய நீ உரிமை பாராட்டுகிறாயல்லவா? இந்த உரிமையைப் பிறருக்கும் நீ அளிக்கவேண்டும். அதை அவன் செலுத்தும்போது அவனைக் குறித்துப்பேச உனக்குப் பாத்தியமில்லை.

(25) அவன் தப்பி நடக்கிறானென்று நீ நினைத்தால், அவனைத் திருத்த நீ சமயம் பார்த்து உபாயந்தேடித் தனிமையாய் மரியாதை தவறாது, பேச முடியுமாகில், அவன் தவறுதலை நீ ஒருவேளை அவனுக்கு ரூபிக்கலாம் என்றாலும், அநேக சமயங்களில், இதுவே தகாது; தலையிடுதலாய்ப்போய்விடும்.

(26) எக்காரணத்தைக்கொண்டும், மூன்றாம் மனிதனிடம் நீ போய் எதைப்பற்றியும் பறைசாட்ட வேண்டாம். அது கெட்ட செய்கையாகவிருக்கிறது.

(27) ஒரு குழந்தையையாவது, ஒரு மிருகத்தையாவது வேறுயாராவது உபத்திரவம் செய்வதை நீ கண்டால், அதை நீ தடுக்கப் பிரவேசிப்பது உனது கடமை, எவனாவது ராஜாங்க சட்டத்திற்கு விரோதமாய் நடப்பதை நீ பார்த்தால், அதிகாரிகளிடம் நீ அதைத் தெரிவிக்க வேண்டும்.

(28) உன்னிடம் கற்க,வேருெருவன் உன்னிடம் வருவானுகில் அவனுடைய தப்பிதங்களை அவனுக்கு நீ சாந்தமாய் எடுத்துக்காட்டுவது, உன் கடமையாக ஏற்படலாம். இவ்விதங்களில் தவிர, உன் சொந்தகாரியத்தைக் கவனி. மௌனமாகிற நற்குணத்தை நீ கற்றுக்கொள்.

(29) சித்திகளுக்காசைப்படாதே. உனக்கு அவைகள் வேண்டியது நன்மையென்று குருநாதன் அறியுங்காலத்தில் அவைகள் உனக்குவரும்.

(30) பக்குவம் வருமுன் அவைகளை அடைந்தால் தீங்கை விளைவிக்கும், தவிர தந்திரமுள்ள க்ஷுத்ர தேவதைகள் இவ்வித சித்தர்களுக்குப் பலவிதங்களிலும் தப்பு வழியைக் காட்டும், அல்லது அச் சித்திப் பெற்றவர்கள் கருவமடைந்து, தாங்கள் தவறக் கூடாதவர்களென்றும் நினைக்கலாம். இது எப்படியானுலும் சரி சித்திகளை அடையும் பொருட்டுச் செலவழிக்கும் காலத்தையும் பிரயத்தனத்தையும், பிறர்க் குதவி புரிவதில் உபயோகப்படுத்தலாம்.

(31) பக்குவகாலம் வரும்பொழுது சித்திகள் வரும்; வந்தேதீரும். முந்தியே அவைகளுனக்கு வருவது பிரயோஜனகரமென்று, குருநாதன் கண்டால் எவ்விதம் கெடுதியின்றி நீ அடையலாமென்பதை அவர் உனக்குப் போதிப்பார், அதுவரையில் அவைகளில்லாமலிருப்பதே உனக்கு நல்லது.

## ஜூன் மாசம்.

மாசாந்தர அப்பாஸம்:—நீ குருநாதனைச் சரணமடைந்து முற்றிலும் அவரை நம்பவேண்டும் உன்னிடத்திலேயே உனக்கு தைர்யமான நம்பிக்கை யிருக்கவேண்டும்.

## வார அப்யாஸம்.

1-வது வாரம்:—க்ஷமை (பொறுமை).

எதனிடத்தும் அநுகூலமாயிரு. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணங்கிப்போ நட. எல்லாரிடத்தும் அநுகூலமாயும், சாந்தமாயும், பொறுமை யுள்ளவனாயும் இரு.

2-வது வாரம்:—சந்துஷ்டி.

நீ எப்பொழுதும் சந்துஷ்டி யுள்ளவனா யிருக்கவேண்டும். தீயது எதுவானாலும், அது நிலையில்லாததென்பதை ஞாபகத்தில் வைத்து நீ எப்பொழுதும் சந்தோஷமாயும் நிலைபெற்ற சாந்தமனத்தோடு கூடியவனாயு மிருக்கவேண்டியது உனதுகடமை.

3-வது வாரம்:—ஏகாக்கிரதை.

நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து உன்னை ஒரு நிமிஷங்கூட ஒன்றும் திருப்ப இயலாதிருக்கும்படி ஒரே மனத்தினனாய் இருக்கவேண்டும்.

4-வது வாரம்:—திடநிச்சயம்.

குருநாதனை நீ பார்த்துவிட்டால் உனக்கு அவரிடம் திடநம்பிக்கை யேற்பட்டு ஜன்மஜன்மங்களாக அதிகரித்து விடும்.

5-வது வாரம்:—நிக்கிரகம்.

சுத்தமான கண்ணாடியின் வழியே சூரியப்பிரகாசம் துலங்குவது போல் ஸத்யமானது உன் வழியாக சுத்தமாய்ப் பிரகாசிக்க வேண்டும்.

## தினசரி அப்பியாசம்.

(1) எதனிடத்தும் அநுகூலமாயிரு. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணங்கிப்போ நட.

(2) எல்லாரிடத்தும் அநுகூலமாயும், சாந்தமாயும் க்ஷமையாயும இரு. எல்லாரையும் வித்தியாசமின்றிப்பார்.

(இன்னும் வரும்)

கே. எஸ். இராமசந்திர ஐயர்.

# சிறுவர்க்குரிய விஷயம்.

## தயை *

—

ரந்திதேவர் என்னும் நல்ல அரசனைப் பற்றிய கதை.

அன்புள்ள ஸ்வர்ணமணிகளே!

தயையென்பது ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து வந்த வார்த்தை. அதற்குத் தமிழில் இரக்கம் என்று அர்த்தம். பிறரிடத்தில் மிக இரக்கங்கொண்டு, அதிக மேன்மையுடன் விளங்கிய ஓர் அரசனைப்பற்றி, பழைய புஸ்தகம்(புராணம்) ஒன்றில், ஓர் அழகான கதை உள்ளது. அக்கதையை நான் இச்சமயம் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். கவனத்துடன் கேளுங்கள். கவனமில்லாமற் செய்யும் கார்யத்திற்கு நல்ல பலன் ஏற்படாதல்லவா?

முன் ஒரு காலத்தில் ரந்திதேவர் என்ற ஓர் அரசர் இருந்தார். அவர் ஸங்க்ருதி என்பவருடைய புதல்வர். ஜனங்கள் எல்லோரும் அவரை வெகு நல்ல அரசரென்று கொண்டாடினார்கள். ஏனென்றால் அவர் ஏழைகளுக்கு வேண்டிய அளவு அன்ன ஆகாரம் கொடுத்தும், காசுபணம் கொடுத்தும் உதவிவந்தார். தம்மிடமிருப்பதையெல்லாம் இவ்விதம் ரந்திதேவர் பிறருக்கே கொடுத்து வந்தாராகையால், சில சமயங்களில் ஏழைகளாகிய பிறருடைய பசிப் பிணியைத் தீர்க்கும் பொருட்டுத் தாமும், தம் குடும்பத்தாரும் பட்டினியாயிருக்கும்படியும் நேர்ந்தது.

ஒரு சமயம், ரந்திதேவரும் அவரது குடும்பத்தார்களும் பலநாட்களாக ஆகாரமில்லாமையால்,பசியால் இளைத்துக் களைத்திருந்தனர். சிறந்த குணமுள்ள இவர்கள்

* ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜ் ஸ்தாபகர்களால் ஹிந்து வாலிபர்களுடைய நன்மையை உத்தேசித்து எழுதப்பட்ட ஆங்கிலக்கதைப் புஸ்தகத்தினின்று தமிழிலெடுத்தெழுதப்பட்டது.

இவ்வருத்தமான நிலைமையில் இருப்பதைக் கண்ட ஒருவர் இவர்களுக்கிரங்கி, சொற்ப ஆகாரமும், நல்லபால் கொஞ்சமும், கொஞ்சம் நெய், வாற் கோதுமை கொஞ்சம் இவ்வளவையும் கொணர்ந்து கொடுத்தார். அவர்கள் அவ்வாகாரத்தைச் சாப்பிட உட்கார்ந்த சமயம், ஓர் பிராமண அதிதி வந்து சிறிது ஆகாரத்தை யாசித்தான். அப்பிராமணனும் மிகப் பசியுள்ளவனுயிருந்தான். உடனே ரந்திதேவர் மிகுந்த பிரியத்துடன் அப்பிராமணனை உபசரித்து, அவனுக்கு முதலில் அன்னம் இட்டார்.

பிராமணன் சாப்பிட்டு முடிந்ததும், விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான். மீதியிருந்த ஆகாரத்தை எல்லோருக்கும் ஸமபாகமாகப் பகுந்துகொடுத்தார். தன் பாகத்தை சாப்பிடப்போகும் சமயம், சூத்திரன் ஒருவன் வந்து "ஐயா! மிகப் பசியாயிருக்கிறேன், கொஞ்சம் ஆகாரங்கொடுங்கள்" என்று கேட்டான். இன்னும் ரந்திதேவர் தான் ஒன்றும் சாப்பிடாமற் போனுலும், 'பசி' யென்று கேட்பவனுக்கு முதலிற் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், சூத்திரனுக்குச் சிறிது உணவு கொடுக்கவே, அவனும் பசியாறித் திருப்தியடைந்து போய்விட்டான்.

கடைசியாக மீதியிருந்த அற்ப சொற்பத்தையுங்கூட அவர் சாப்பிட இயலாமல், ஒரு குறவன் சில நாய்களுடன் வந்து, ஆகாரத்தை யாசித்தான். உடனே தன்னிடமிருந்த உணவு அனைத்தையும் நாய்களுக்கும் குறவனுக்குமாகப் பகுந்து கொடுத்துவிட்டார்.

பிறகு அக்குறவனும் நாய்களைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போனுன். கடைசியாக மீதியிருந்த ஒரு சிறு கலசம் தண்ணீரை மட்டும உட்கொண்டு, தாஹத்தைத் தீர்த்துக்கொண்டு சும்மாவிருந்து விடலாம் என்று அவர் நினைப்பதற்குள், ஒரு பறையன் வெயிலில் களைத்து, "ஐயா,

எனக்கு மிகத்தாகமாயிருக்கிறது. இரக்கமுற்றுக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்க மாட்டீர்களா?" என்று கூவினன். அப்பறையன் தீண்டாத ஜாதியானுயிருந்த போதிலும், அன்பின் களஞ்சியம் அல்லது தயாநிதியென்று சொல்லத் தக்க ரந்திதேவர், அவனுடைய சிரமத்தையும் பலவீனத்தையும் நன்கு உணர்ந்து அவனுக்கிரங்கி, தான் சாப்பிட எண்ணியிருந்த தீர்த்தத்தையும், அவ்வேழைப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டார். அவனுக்குத் தண்ணீர் வார்க்கும்போதே, அவனுடைய சௌக்கியத்தைக் கோரியவராய், தீவ்ரமான அன்போடு, ரந்திதேவர் பின் வருமாறு சொல்ல ஆரம்பித்தார்:—

"என்பசியும் தாஹமும் தணிந்தன. நான் கடவுளைப் பிரார்த்திப்பதெல்லாம், பிறருடைய துக்கங்களையும் கஷ்டங்களையும் என்னுடையதாக பாவித்து, அவர்களுடைய துன்பத்தைக் குறைக்க முயல்வதே என்னுடைய பாக்யமாயிருந்தால் போதும் என்பதேயாம்."

ரந்திதேவர் சரித்திரத்தால் நாம் அறிந்துகொண்ட விஷயங்கள் என்னென்னவென்று பார்ப்போம்:—

1. பிராஹ்மணர்களானாலும், சூத்திரர்களானாலும், பறையர்கள் முதலிய, தாழ்ந்த ஜாதியார்களானாலும், எந்த பிச்சைக்காரர்களானாலும், நாய்கள் முதலிய பிராணிகளானாலும், எல்லோரிடத்தும் எவ்விதம் ஒரே மாதிரியான தயையுள்ளவராக நாம்நடக்கவேண்டும் என்பதை முதலில் அறிந்துகொண்டோம்.

2. ரந்தி தேவரைப்போல நம்முடைய ஆஹாரம் அவ்வளவையும் பிறருக்கே கொடுக்க இயலாதபோதிலும், பசித்து வந்தவர்களுக்குச் சொற்பமாவது நாமும் கொடுக்க முயற்சிக்கலாம் என்பதையும் அறிவோம்.

3 இவ்விதமான உபகாரங்களைப் பெரியவர்கள்தான் செய்யக்கூடுமென்பதில்லை. சிறுவர், சிறுமிகள் எல்லோரும் கூட இவ்வித உபகாரங்களைச் செய்தல் இலகுவாம்.

4. நாம் எல்லோரிடத்தும் அன்பு, பாராட்டவேண்டியதவசியம். அன்பு, தயை, இரக்கம் எல்லாம் ஒரே அர்த்தத்தைத்தான் விளக்குகின்றது. நம்முடைய சொந்தக் குடும்பத்தார்களாயிருந்தாலும் சரி, அந்யர்களாயிருந்தாலும் சரி, பணக்காரர்களாயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, பிராஹ்மணர்களாயிருந்தாலும் சரி, பறையர்களாயிருந்தாலும் சரி, எல்லோரிடத்தும் நாம் தயையுள்ளவர்களாயிருக்கவேண்டியது தான். எவனொருவன் நம்முடைய ஒத்தாசையை வேண்டுகிறானோ, அவனை நாம் நம்முடைய ஸஹோதரனாகக் கருதவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களை எல்லாம் நாம் கூர்ந்து கவனிப்போமானால், இதுவரை வெளிவந்தமுன் கடிதங்களிலெல்லாம், எழுதப்பட்டபடி ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்துச் சிறுவர், சிறுமிகள் பழகித்தேரவேண்டிய குணங்களில் ரந்திதேவர் எவ்வளவு தேர்ச்சியுள்ளவராயிருந்திருக்கிறார் பார்த்தீர்களா? உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஸ்வர்ணமணிமாலைச் சங்கம், ரந்திதேவர் காலத்தில் இல்லை. ஆயினும் அவர் எவ்வளவு தயை நிறைந்தவர்! என்பதை அடிக்கடி நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ரந்திதேவரைப் போலவே நீங்கள் தயை நிறைந்தவர்களாக வேண்டும்.

உங்கள் அன்புள்ள

வஸந்தாநந்தன்.

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. ப |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசுகிறிஸ்துஎன்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0—12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌநவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையார்சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருதமூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | உலோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞாநிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—9 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மஞ்ஞாநமும் பிரஹ்மஞ்ஞான சபையும் | 0—0—6 |
| 27. | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞ்ஞாநஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.

பல கண்காட்சிகளில்
மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**சுகந்த மூக்குத்தூள்:**—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ, அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க் கலந்து கொண்டால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருப்பதுமன்றி சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவாச்சாரம் சேரவில்லை வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி, சதா, கம கமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம் போடுகிற வழக்கத்தை நாளுக்கு நாள் குறைத்து, கடைசியில் சிலர் தூள் போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டு விடும்படிக்கு செய்யும் ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்கு போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. சிலவு 1-முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம், 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 7 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப் பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனியெல்லா ஆர்டர்களும், இப்பாகத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.